Subscription Rs 1 50
Postage to Ceylon & India 50
do Straits 75

Advertising charges per line 10
do per half col Rs 3 00
do per Column 5 00

# THE Hindu Organ

VOL X. 10-ம் புத்தகம் | JAFFNA, WEDNESDAY MARCH 1, 1899 | இந்துசாதனம். | கலியுகவருஷம் ௫000. ௧அ௯௯ மார்ச்சுமீ ௧௨ | NO. 14 இல ௧௪

PUBLISHED EVERY OTHER WEDNESDAY. பக்ஷத்துக்கொருமுறை புதன்கிழமைகளிற் பிரசுரிக்கப்படும்.

## TO OUR SUBSCRIBERS.

We would earnestly entreat all our subscribers in arrears, to remit their dues at once. Although the paper was prized as low as possible, and any surplus income from it was to be devoted towards a noble cause, we regret very much to have to complain that owing to the remissness of our subscribers, we have not been able to carry out even the necessary reforms in the paper. Still we hope that better times are in store for us, and that all our subscribers would promptly pay up their arrears and subscribe to the proposed new series of the Hindu Organ.

*The Manager*

SUBSCRIBE
TO
THE *HINDU ORGAN*
ENGLISH WEEKLY
AND
TAMIL FORTNIGHTLY
EDITIONS
TO BE
PUBLISHED SHORTLY

All surplus income from the paper will be devoted to further the Educational work of the Sabhai.

FOR PATRONS

| | Rs. Cts. | |
|---|---|---|
| Jaffna Town per annum | 10-00 | and upwards |
| Outstations and India | 11 00 | do |
| Straits Settlements | 12-00 | do |

Fortnightly Tamil, and weekly English, editions of the *Hindu Organ* will be sent free to patrons for one year.

FOR SUBSCRIBERS.

| | Tam. Ed: Rs-Cts. | Eng: Ed: Rs-Cts. | Both Ed: Rs Cts. |
|---|---|---|---|
| Jaffna Town per annum | 1-50 | 3 00 | 4-00 |
| Outstations and India | 2-00 | 4-00 | 5-50 |
| Straits Settlement | 2-25 | 4-50 | 6-25 |

*The Manager*

Ceylon Technical College, Colombo.

DEPARTMENT OF TELEGRAPHY AND ELECTRICAL ENGINEERING.

*Entrance Examinations.*

An Entrance Examination for admission of students to the above Department of the Technical College will be held in Colombo at the College on Wednesday, March 22, and following days, commencing at 10.30 A. M. The examinaoion will be held in Jaffna also about the same date.

Forms of application containing all particulars can be obtained from the Superintendent of the College, Colombo, and from the Government Agent, Jaffna.

Candidates who intend coming to Colombo to be examined will forward those forms to the Superintendent of the College before March 22 and those who wish to attend the Jaffna examination will forward the forms to the Government Agent, Jaffna.

There are upwards of forty vacancies to fill at the Technical College in this Department of it. Those who are admitted as students and pass the course and gain the diploma will be eligible for selection to appointments in the Post Office and Railway Departments of Government Service.

N. B.—Entrance Examinations for the Civil and Mechanical Engineering Departments of the College will be held after Easter on dates which will be duly announced.

E. HUMAN
Colombo, February 13, 1899. Superintendent

NOTICE.

All Money Orders, Postal Orders, Cheques and other remittances must be made payable
To
*THE MANAGER*
"HINDU ORGAN"
*Jaffna*

## THE HINDU ORGAN.

JAFFNA, WEDNESDAY, MARCH 1, 1899

### *HEATHEN AND PAGAN.*

We did not expect, at the time we drew the attention of the Christian public to the offensiveness of the words "heathen" and "pagan", that "a student" of the "Catholic Guardian" would instead of going directly to the point at issue, treat us to a definition of the words, and their primary and secondary meanings. He thinks that Stormonth's Dictionary and Century Dictionary are authorities superior to Webster. But we never relied on Webster nor quoted Webster; in fact we did not refer to any dictionary at the time we wrote the article. The relative merits of Webster's Dictionary and those quoted by our contemporary's correspondent, do not concern us; nor is there any practical difference between his authorites and Webster. It is admitted on all hands and by all authorities that *heathen* and *pagan* are *offensive* terms applied by the Christian Churches to non Christians. They denote and connote much more than the words non-Christian non-Muhammadan, and non-Jew—they are words of contempt. Besides, a strange inconsistency is involved in the non-application of the words to Muhammadans, while Hindus and Buddhists, whose religions, according to Dr. Barrows and others, are superior to Muhammadanism, and who are regarded by the generality of Christians as more civilized and cultured than Muhammadans, come under the category of heathens and pagans. We should not, however, be understood to imply that our Muhammadan fellow-countrymen should be characterized as heathen and pagan. Two wrongs do not make a right. If we refer to Muhammadans, it is simply to show the fickleness of usage.

According to Christian notions, Hindus are worshippers of false Gods, and if Christians are senseless enough to believe that Hindus pay homage to pieces of wood and stone, they are idolators too. But the meaning conveyed by the words *heathen* and *pagan* is not restricted to the worship of false Gods and idolatry. They mean also unlettered and uncultured persons—nay, very ignorant and rude persons. One of the "Guardian's" own authorities defines "heathen" as a *very ignorant* person, and Webster defines a "pagan", as distinguished from a "heathen", as a *rude* and *uncivilized* idolator. The original meaning of the words—a *villager* (who was actually an uncivilized, rude, ignorant person, while a towsman was a civilized, cultured, refined person)—still lingers in their use. The original use of the words coincided with the real state of things. The inhabitants of the towns and cities of the Roman Empire—Dr Trench's seats and centres of intelligence—who were cultured and enlightened became converts to Christianity, long before the inhabitants of the villages, who were rude ignorant, and uncivilized, so that for several years after the introduction of Christianity into the Roman Empire, and when the word "pagan" began to be used in its secondary sense, Christianity was synonymous with culture and refinement, while the ancient religion of Rome was synonymous with rudeness, ignorance, and barbarism. But at this day, Christianity counts in its ranks many "very ignorant" persons, while among Hindus and Buddhists are found many whom Christians themselves regard as enlightened persons. Christianity is not always associated with enlightenment nor is Hinduism always found to keep company ignorance. There are most rude, ignorant, and ill-mannered people among Christians as well as among Hindus and Buddhists. These reflections must suggest to the various Christian Churches the desirability, if not the necessity, of dropping from their vocabulary the offensive epithets *heathen* and *pagan*.

We have neither the right nor the power to dictate to Christians the course of conduct they ought to adopt towards Hindus. It is a duty we owe to our co-religionists to state in the columns of the "Hindu Organ" our objections to the use of the words and the grounds of our objections. Having expressed our sense of the action of the Churches, we remain contented that we have done our duty by our countrymen. If the Christian Churches have not the good sense to desist from using the words, it is not our fault, nor is it a matter over which we feel called upon to raise a quarrel either with our Catholic contemporary or anybody else.

As to our indulging in "rhapsodies against Christians and Christianity", the less said the better. We are not aware of having rhapsodied against Christianity, the true spirit of which has not been imbibed by many of the so called Christian Churches. As to our rhapsodying against Christians, were Christ and his Apostles in the wrong when they "rhapsodied" against Pharisees and Saducees? We respect all good and sincere Christians. It is the Judases we decry against. If the cap does not fit him why should "a student" try to don it?

Taking for granted that we have been "rhapsodying" against Christianity, we wish to know why Christians desire us to follow a line of action different to theirs. In the "Guardian" of 24th January, Professor Drennan speaks of "so much pagan darkness" around Catholic Jaffna. But, as the professor has not seen enough of Jaffna, we do no more than allude to it. In the address presented to the Rev. Marshall Hartley, the Christians of Batticaloa, are glad to announce that they are "a people of the living God in the midst of a heathen land." Apart from the contemptuous reference made to the Hindus, which is our chief concern, the words of the address depict a state of things which is not altogether consistent with the truth. It is Christian Batticaloa, and not "heathen" Batticaloa, that is known to be a hotbed of factions and feuds. Then, how can the

(continued on the 4th page)

உ
கணபதி துணை

வாழ்க வந்தணர்வானவ ரானினம்........ *
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக.......... *
ஆழ்க தீயதெல்லா மரனாமமே........ *
சூழ்க வையக மும்துயர் தீர்கவே......... *

# விளம்பரம்.

## இவ்வியந்திரசாலையில் விலைப்படும் புத்தகங்கள்.

| | | ரூ | சதம். |
|---|---|---|---|
| சமச்சிவாயமாலை... | ... | ,, | - ௯ |
| ஆத்திசூடி கொன்றைவேந்தன் உரை... | | ,, | - ௬ |
| முதலாம் பாலபாடம்... | ... | ,, | - ௬ |
| இரண்டாம் பாலபாடம்... | ... | ,, | - ௧௨௫ |
| மூன்றாம் பாலபாடம்... | ... | ,, | - ௨௫ |
| நாலாம் பாலபாடம்... | ... | ,, | - ௯0 |
| ஐந்தாம் பாலபாடம்... | ... | ,, | - ௯௭௫ |
| சிவாலய தரிசனவிதி... | ... | ,, | - ௪௨ |
| கிரியாக்கிரமவிளக்கம்... | ... | ,, | - ௪௫ |
| பூமிசாஸ்திரவிளக்கம் ௫-ம், ௬-ம், ௭-ம், ௮-ம், தரங்களுக்கு... | ... | ,, | - ௪௫ |
| மறைசையந்தாதியுரை... | ... | ,, | - ௨௫ |
| வைதிக சைவ சுத்தாத்துவித சைவ சித்தாந்தம்...... | | ,, | -௨௫ |
| நிகண்டு முதலாவதுமுதல் ௧௨வது முடிய | | ௧ | - ௨0 |
| நிகண்டு முதலாவதுமுதல் பத்தாவதுமுடிய | | ,, | - ௯0 |
| நிகண்டு ௧௧-வது முதல் ௧௨-வது முடிய... | | ,, | - ௯௭௫ |

### இந்துசாதன கையொப்பவரவு.

ஸ்ரீ

| | | ரூ. ச. |
|---|---|---|
| A. சுப்பையா | திரிகோணமலை | ௫-00 |
| A. முத்ததம்பி | சாவகச்சேரி | ௪-00 |
| S. கனகசபைப்பிள்ளை | பன்னாலை | ௯-00 |
| P. நாராணசுவாமி | கொழும்பு | ௫-00 |
| V. விசுவநாதர் | அனுராதா | ௫-00 |
| V. செல்லத்துரை | மருதங்கடவலை | ௨-௫0 |
| P. இராமலிங்கபிள்ளை | புத்தளம் | ௨-00 |
| T. செல்லக்குட்டிப்பிள்ளை | மானிப்பாய் | ௧-௫0 |
| சி. இராமலிங்கம் | பருத்தித்துறை | ௧-00 |
| K. வீரவாகு........... | (தொடந்தவை) ... | ௨-00 |

### இந்துகாலீஜின் நயத்தின்பொருட்டு உபகரித்த பணத்தொகைகளும் வரவும்.

| ஸ்ரீ | | ஒப்பமிட்டது. ரூ-சத | வரவு. ரூ-சத |
|---|---|---|---|
| C W சின்னப்பாபிள்ளை | (சென்னபட்) | ௫0-00 | |
| S குமாரசுவாமி | (கொழும்புது) | ௨௫-00 | ௧0-00 |
| S இராமநாதர் | (சுன்னாகம்) | ௧0-00 | |
| A தாமோதரம்பிள்ளை | ,, | ௧0-00 | |
| T சின்னத்தம்பர் | ,, | ௨-௫0 | |
| M சிதம்பரநாதர் | ,, | ௧0-00 | |
| S இளையதம்பி | ,, | ௫-00 | |
| மு திருவம்பலம் | ,, | ௫-00 | |
| A செல்லப்பா | ,, | ௫-00 | |
| க முதலியார் சிவசம்பு | ,, | ௯-00 | |
| I சுவாமிநாதர் | (மல்லாகம்) | ௨-௫0 | |
| S சின்னப்பு | ,, | ௫-00 | |
| M சுப்பையா | (ஆனைக்கோட்டை) | ௨-௫0 | ௨-௫0 |
| W C இளையதம்பி | ,, | ௨-௫0 | ௨-00 |
| P கனகசபை | ,, | ௫-00 | |
| C வேதாரணியம்பிள்ளை | (மல்லாகம்) | ௪0-00 | ௪0-00 |
| இ அருளம்பலம் சேர்த்த தொகை | | ௪௯-௫௪ | ௪௧-௪௯ |
| K ஆறுமுகம் | (தொல்புரம்) | ௨-௫0 | |
| A வேலுப்பிள்ளை | (உடுவில்) | ௧௫-00 | |
| T நாகலிங்கம் | (மல்லாகம்) | ௧0-00 | |
| K கார்த்திகேசபிள்ளை | ,, | ௯-00 | |
| S நாராயணர் | ,, | ௨-௫0 | |
| A ஆறுமுகம் | ,, | ௨-௫0 | |
| S கனகராயர் | (தெல்லிப்பழை) | ௧0-00 | |
| T S துரையப்பா | ,, | ௨-௫0 | |
| A சிதம்பரஉடையார் | ,, | ௫-00 | |
| E விநாசித்தம்பி | (வீமன்காமம்) | ௨௧-00 | |
| R இளையதம்பி | (மல்லாகம்) | ௫-00 | |
| P கதிரிப்பிள்ளை | ,, | ௫-00 | |
| A நாகர் | ,, | ௭-௫0 | |
| S சதாசிவம் | (திருநெல்வேலி) | ௨-௫0 | |
| S சதாசிவம் | (வண்ணார்பண்ணை) | ௯-00 | ௯-00 |
| க சின்னையா | (கலட்டி) | ௨-௫0 | |
| வை கார்த்திகேசு | ,, | ௨-00 | ௧-00 |
| ஓர் சிநேகன் | (சீதாரி) | ௧0-00 | ௧0-00 |
| சி வஸ்தியாம்பிள்ளைமுத | ,, | ௧0-00 | |
| S சின்னியப்பா | ,, | ௨-௫0 | ௨-௫0 |
| க. சிதம்பரப்பிள்ளை | (தனங்கிளப்பு) | -௧0 | -௧0 |
| J C பொன்னம்பலம் | (சீதாரி) | ௧-00 | ௧-00 |

### "இந்துகாலீஜ்" பணச்சடங்கில் உபகரித்த தொகைகளில் அறவிட்ட பணம்.

| ஸ்ரீ | | ரூ. சத. |
|---|---|---|
| ச முத்தையாச்செட்டி | (கடையடி) | ௧௫-00 |
| கு குமாராண்டிச்செட்டி | (கடையடி) | ௫-00 |
| நா சண்முகசெட்டி | (கடையடி) | ௯-00 |
| லெ குப்பைமுத்துச்செட்டி | (கடையடி) | ௨-00 |
| சி சங்கலிங்கஞ்செட்டி | (கடையடி) | ௨-00 |

| | | |
|---|---|---|
| க வேலுப்பிள்ளை | (யாழ்: சீதாரி) | ௫-00 |
| வி சிதம்பரப்பிள்ளை | (கச்சேரி) | ௨-00 |
| சுப்பர் கதிரவேலு | (கொட்டடி) | ௧0-00 |

# மகாபாரதம்

## சபா பருவம்.

இது விளம்பி ௵ கார்த்திகை ௴ முதல் சஞ்சிகையாக விற்றுவருகின்றோம். சஞ்சிகை ௧ தபாற் செலவுடன் உ௮ சதம்.

ஆதிபருவம் உரையாசிரியர் படத்தோடு ரூபா ௩½.

வை. சுப்பிரமணியபிள்ளை
விவேகாநந்த யந்திரசாலை மானேசர்

### உறுதியழித்தல் விளம்பரம்.

நான் நுணுவில்குடி சின்னப்பொடியர் கதிரேசருக்கு, கைதடி நாவற்குளி கொத்தாரிசு சி. வேலாயுதர் முகதாவில் ௧௮௯௯ம ஆண்டு ஆனி௴ ௧௭௨ ௯௯௧௪ம் இலக்கத்தில் நன்கொடை உபசமாயெழுதிக்கொடுத்த உறுதியை, அவர் காலஞ்சென்றுவிட்டபடியால் அழித்து அதன் ஆட்சியை ஒப்புக்கொண்டிருக்கிறேனென்பதை வெளிப்படுத்துகிறேன்.

தியாகர் கைம்பெண் X தங்கமுத்து (கீறல்)

### விளம்பரம்.

இக்காற் சகலருமறியவும். வண்கிழக்கு சீனியப்பசெட்டி கோவிந்தவும் பெண் அம்மணியம்மாவும் வண்கிழக்கு சின்னத்தம்பிச்செட்டி இராமசாமிச்செட்டியாகிய எனக்கு ௬00 ரூபாவுக்கு எழுதித்தந்த நோட்டை நாளிப்போசித்தாரித்திருக்கிறபடியால் அவர்கள் என்னை நட்டப்படுத்தும்படி தங்கள் ஆதனங்களை வேறு மாறுதல்பண்ண எண்ணியிருக்கிறார்கள். ஆகையால் அவர்களுடைய ஆதனங்களை ஈடாக அல்லது அறுதியாக அல்லது நன்கொடையாக அல்லது வேறெந்தவிதமாயாவது எவராவது வாங்கக்கூடாதென்று இத்தால் அறிவிக்கிறேன்.

௧௮௯௯ ௵ மாசி௴ ௧௩-௨ } இங்ஙனம் சின்னத்தம்பிச்செட்டி இராமசாமிச்செட்டி.

# இந்துசாதனம்.

## தமிழ்ப்பாஷாபிவிர்த்தி.

:o:

நமது நாடானது வேற்றரசர்கைப்பட்ட நாண்முதல் எமது சுதேசபாஷையாகிய தமிழ்ப்பாஷையானது தக்கவாறு பரிபாலிக்கப்படாது வரவரத் தாழ்வடைந்துகொண்டு வருகின்றதென்பது மறுக்கொண[redacted]ம. பண்டைக்காலத்தில் தமிழை நன்குகற்ற புலவர்களும் வித்துவான்களும் தமிழரசர்களாலும் மற்றையோராலும் சன்மானிக்கப்பட்டுப் பெருங்கீர்த்தியையும் புகழையும் படைத்ததுமன்றி அக் கல்வியறிவாற் பெரும பிரயோசனத்தையுமடைந்து வந்தனர், தற்காலத்திலோ அங்ஙனமன்று. அரசினர் பாஷையாகிய ஆங்கிளபாஷையைக் கற்பதே சிலுவாத்தத்தைத் தேடிக்கொள்வதற்குச் சிறந்தவழியாயிருப்பதாலும் அதைக் கற்றிருப்பவர்களே அதிகமாகக் கணியப்படுத்தப்படுகின்றனராதலாலும் அப்பாஷையையே இப்பொழுது எவரும் விரும்பிக் கற்கின்றனர். இங்ஙன மெமது தமிழ்ப்பாஷையானது அசட்டைபண்ணப்பட்டுக் குறைவடைந்துவருவதைக் கண்ணுற்ற சுயபாஷாபிமானப் பிரபுக்கள் அதனை விருத்திசெய்வதற்காய் ஆங்காங்கு பல முயற்சிகள் செய்கின்றனர். சென்னைச் சர்வகலாசாலையார் இற்றைக்குச் சிறிதுகாலத்திற்குமுன் இவ்விஷயத்தைக் குறித்து ஆலோசித்திருக்கின்றனர். அவர்கள் இப்பொழுது தாழ்வடைந்திருக்கும் தமிழ்ப்பாஷையையும் மற்றைய சுதேசபாஷைகளையும் விருத்திசெய்யக்கூடிய வழிவகைகளை விரைவில் ஏற்படுத்திவைப்பரென நினைக்கின்றேம. இன்னும் இந்தியாவிலுள்ள பிரபுக்கள் பலர் இதுவிஷயமாக வேறுவேறு பற்பல பிரயத்தனங்கள் செய்து வருகின்றனர்.

இதுநிற்க, எம்மூர்த் தமிழ்வித்துவான்கள் பலர் சேர்ந்து தமிழ்ச்சங்கமொன்றை ஸ்தாபித்து பரீக்ஷைகளை ஏற்படுத்தி யப்பரீக்ஷைகளிற் சித்திபெறும் மாணவர்களுக்குப் பரிசளித்து வருகின்றனர். சென்ற உ௫௨ இரவு வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலையிலேசங்கத்தார் ஏற்படுத்திய பாலபண்டிதர் பரீக்ஷையிற் சித்திபெற்ற மாணவர்களுக்கு பட்டங்களும் பரிசுகளும் அளிக்கப்பட்டன. அன்று அவ்வித்தியாசாலையிற் கூடிய சனத்திரளே தமிழ்ப்பாஷாபிவிருத்தியில் எம்மூரவர் எவ்வளவு அவாவுடையவர்களாயிருக்கின்றனரென்பதை நன்கு காட்டிற்று. சமயபேதமின்றிக் கிறீஸ்தவர் சைவராதியோர் பலர் வந்து குழுமினர், ஊர்காவற்றுறைப் பொலிஸ்நீதவானாயிருந்து இப்பொழுது இளைப்பாறியிருக்கும் ஸ்ரீ. கு. கதிரைவேற்பிள்ளையவர்கள் அக்கிராசனாதிபதியாயிருந்தனர். இச்சங்கத்தாருடைய முயற்சியைப் பாராட்டி தமிழ்ப்பாஷையின் விசிட்டத்தைக் குறித்தும், அதன் தற்கால நிலையைக் குறித்தும், அதனைப் பரிபாலிக்கும்விதத்தைக் குறித்தும் பலரும் பலவிதமாகப் பேசினர். இந்துகாலீஜ் பிரதம ஆசிரியர் ஸ்ரீ. செல்வத்துரைப்பிள்ளையவர்கள் இச்சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பரீக்ஷை விஷயங்களுள் பிரகிருதிசாஸ்திரமும் (Natural Science) ஒன்றாகச் சேர்க்கப்படவேண்டுமென்றும், அச்சாஸ்திரம் தமிழில் இல்லாதபடியால் இச்சங்கத்தார் இங்கிலிஷ்பாஷையிலிருந்து அதனை மொழிபெயர்த்து இம்மாணவர்க்குக் கற்பித்துவரவேண்டுமென்றுஞ் சொல்லினர். ஸ்ரீ. கோவிந்தபிள்ளையவர்கள் எழுந்து பேசியபோது பிரகிருதிசாஸ்திரம் தமிழ்நூல்களிலுண்டென சில மேற்கோள்கள் எடுத்துக்காட்டிப் பேசினர். பிரகிருதிசாஸ்திரசம்பந்தமான விஷயங்கள் சில தமிழ்நூல்களில் ஆங்காங்கு இலைமறைகாய்போற் தோற்றுவதுண்மையே. ஆயின் இங்கிலிஷ்பாஷையிற்போல இவைகள் விரிவாய் எந்த நூலிலாவது தமிழில் எழுதப்படவில்லை. இச்சாஸ்திரத்தையும் ஏனைய பல சாஸ்திரங்களையும் இங்கிலிஷ்பாஷையிலிருந்து மொழிபெயர்த்து தமிழைமாத்திரங் கற்கும் மாணவருக்குப் படிப்பித்துவருதல் பெரும் பிரயோசனத்தை விளைக்கும். சாஸ்திரங்களைமாத்திரமன்று இங்கிலிஷிலுள்ள பலவித இதிகாசங்களையும் சுத்த செந்தமிழில் மொழிபெயர்த்து படிப்பித்துவரவேண்டியது. இன்னும் இங்கிலிஷ்பாஷையிலுள்ள அரிய நூல்களையுந் தமிழில் மொழிபெயர்த்து உபயோகிப்பது உத்தமமாகும். சென்னைச் சர்வகலாசாலையில் சுதேசபாஷாபிவிருத்தி விஷயமாகக் கூடிய சபையில் அக்கலாசாலைப் பிரதம ஆசிரியராகிய டன்கன் பண்டிதரவர்களும் வேறுஞ் சிலரும் சுதேசபாஷைகளிலுள்ள இலக்கிய இலக்கணங்களைமாத்திரங் கற்றுப் பண்டிதர்களெனவும், கவிவாணரெனவும், புலவரெனவும் நாமஞ்சூட்டிக் கிரியவர்களுக்கு பலவிஷயங்களிலும் நுழையக்கூடிய விரிந்த அறிவில்லையென்று பேசியிருக்கின்றனர் இஃதுண்மையே நிகண்டையும், சூத்திரங்களையும் நெட்டுருப்பண்ணிக்கொண்டு கந்தபுராணம் இராமாயணம் முதலிய இலக்கியநூல்களுக்கு வாய்ப்பாடமாய்ப் பொருள்சொல்லமாத்திரங் கற்றிருப்பவர்களுக்கு விரிந்த அறிவு எப்படியுண்டாகும் ஆகவே விரிந்த அறிவுண்டாவதற்கு பல சாஸ்திரங்களையும் இதிகாசங்களையும் கற்றலத்தியாவசியகம். இதை இத்தமிழ்ச்சங்கத்தார் நன்கு கவனிப்பரென நினைக்கின்றேம்.

## சமாசாரம்

காலநிலை—வெயில் கடுமைப்படவெறிக்கின்றது. பனி குறைவு. லெட்டுமிதிப்பு மிகுந்தவிட்டது சுரமி ப்போ தணிவு.

விருந்தளித்தல்—(At Home) எங்கள் ஏசன்றரவர்களின் மனைவியார் சென்ற உ௮ம் தேதி கச்சேரி வளவில் சென்றவருடத்திற்போல ஓர் விருந்தக்கொண்டாட்டம் நடத்தினர். அதற்கு நாவலர், தலைமைக்காரர், கச்சேரி உத்தியோகஸ்தர்கள் முதலிய பலதிறத்தினர், சமுசார ஸ்திரீகளையும் தனித்தனி, சென்றிருந்தனர்.

உத்தியோக நியமனம்—காலஞ்சென்றுபோன ஸ்ரீ கலாநிதிசிங்கமவர்களின் இடத்திற்கு வெ. ஸ் நீக்கலஸ் என்பவர் கவிசாரணை உத்தியோகஸ்தராக நியமனம் பெற்றிருக்கின்றனர். இவர் வியாபாரியார் ஸ்ரீ மனுவற்பிள்ளை இராசகாரியருடைய பெண்சாதியின் சகோதரிமகன்.

சுப்பிறீங்கோடு—கிறிமினல் விசாரணைச் சுப்பிறீங்கோடு இத்தமீ உ௭ம் தேதி கூடிற்று. வெஸ் உவிதேவ்துரையவர்கள் நீதாசனமலங்கக மெஸ் பிறின்ஸ் அவர்கள் முடிப்புறத்து நியாயதுரந்தரராகவும், ஸ்ரீ. இராமலிங்கமவர்கள் துவிபாஷிகராகவுமமர்ந்திருந்தனர் வண்ணார்பண்ணையிலுள்ள செட்டிகடையொன்றில் அருசிமூட்டையொன்றைக் களவெடுத்த முதலாம் இலக்கவழக்கு முதன்முதல் விளங்கப்பட்டது. இதில் எதிரியாகநின்ற நாகப்பர் அருணன் என்பவன் சுத்தவாழியெனக்காணப்பட்டு விடுதலைபெற்றனன். பின் அம் இலக்கவழக்கு விளங்கப்பட்டது. இதில் முன் சொல்லிய நாகப்பர் அருணன் என்பவன் களவெடுத்தானென்றும் களவெடுக்கப்பட்ட சாமானொன்றை களவெடுக்கப்பட்டதென அறிந்தும் வைத்திருந்தானென்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தான். இதுமிவன் சுத்தவாழியெனக் காணப்பட்டு விடுதலைபெற்றனன். உ௮௨ உம் இலக்கவழக்கு விளங்கப்பட்டது. இதில் ரத்தினசிங்கம் தளையசிங்கமென்பவர் ௧௮௯௮ம் ௵ ஆடி௴ ௬ம் தேதி மானிப்பாயில் ஓர் வீட்டிற்கு நெருப்புவைத்தானென்னுங் குற்றச்சாட்டின்பேரில் விளங்கப்பட்டுக் குற்றவாழியெனக்காணப்பட்டு ஏழுவருட கடினவழியகாவல் விதிக்கப்பட்டனர்.

விகாரிவருஷவாக்கிய பஞ்சாங்கம்—ஜோதிஷர் ஸ்ரீமத். வி. சபாபதி ஐயரவர்களால் கணிக்கப்பட்டு அவரது ஸ்ரீ பாஸ்கர அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்ட விகாரிவருஷவாக்கிய பஞ்சாங்கம் பெற்றோம். இப்பஞ்சாங்கம் மிக்க திட்பநுட்பத்தோடும் கணிக்கப்பட்டிருக்கின்றது. காலங்களைப்பற்றிய பிரமாணம், மகாதெசையைச் சீக்கிரம் பார்த்துக்கொள்ளக்கூடிய விபரம், கலியுகம் ருooo வருஷத்தின்மேல் நடக்கும் பலன், சோதிடத்தை அனுசரிப்பதால் நவக்கிரககளாலும் திதிவாரங்களாலும் வரும் பலன்கள், சோதிடத்தைப்பற்றி ஐரோப்பிய வானசாஸ்திரிகளுக்குள்ள நம்பிக்கை முதலிய பல பிரயோசனமான புதிய விஷயங்கள் இதிலடங்கியிருக்கின்றன. ஐயரவர்கள் ஜோதிஷத்திலதிக பிரசித்திபெற்றவராதலால் அவரது பஞ்சாங்கத்திற்கு அதிக மானமிருக்குமென நினைக்கின்றோம். இப்பஞ்சாங்கத்தின் பிரதியொன்றை எமது பார்வைக்கனுப்பிய ஆக்கியோனுக்கு ஸ்துதிகூறுகின்றோம்.

டக்தர் தோர்ன்ஹில்—(Dr. Thornhill)—வடமாராட்சி வைத்தியர் டக்தர் தோர்ன்ஹிலவர்கள் ஏதோ சுகவீனங்காரணமாகக் கொழும்புக்குச் சென்றிருக்கின்றனர். ஒருபோது திரும்பி இங்குவரமாட்டாரெனவும் கதைநிகழுகின்றது.

சிசுவதை—வடமராட்சிப்பகுதியில் ஓர்பெண் கள்ளப்பிள்ளையொன்றைப் பெற்று அதனை சாம்பர்க்குவியலுட்புதைத்துக் கொன்றுவிட்டனளாம். பிள்ளை புதைக்கப்பட்டபோது கிரீட்டமூச்சத்தம் அயல்வீட்டிற்குக் கேட்டதாம். இப்பிள்ளையைக் கொன்றபாதகியும் இரண்டொருநாளில் ஏதோ வியாதிகண்டு இறந்துவிட்டனளாம்.

பதிவுக்கோர்த்தலைவரது சுற்றுவிளம்பரம்—பதிவுக்கோர்த்தலைவர் ஸ்ரீ அருணாசலமவர்கள் கோந்தாரிஸ்மாருக்குவிடுத்த சுற்றுவிளம்பரம் விரைவில் ஓர் சட்டமாகும் போலிருக்கின்றது.

மரணம்—கொழும்பில் லாண்டிங் உவேயிற்றர் உத்தியோகத்திலமர்ந்திருக்கும் ஸ்ரீ. க. சுந்தரமவர்களின் மனைவி சென்ற ௨௩-ந்-தேதி தேகவியோகமாகிவிட்டனர். பெற்றோர் உற்றோர்க்கும், தன்னைக்கொண்ட கணவனுக்கும், மாமன் மாமிக்கும் மற்றுமுள்ளோர்க்குமிணங்கிநடந்த ஓர் உத்தம ஸ்திரி. சுகவீனத்தாலிங்குவந்து சிறிதுகாலம் தங்கி, பின் தம்கணவரோடு சொற்பநாட்களின்முன் கொழும்பு சென்றிருந்தவர். இவ்வுத்தம மனைவியை இளம்பராயத்திற் பறிகொடுத்து சோடிழந்த அன்றில்போற் துயருறும் ஸ்ரீ. சுந்தரமவர்களோடும், தனது ஒரேபேறான அருமைப்புதல்வியை இழந்து துன்புறும் வைத்தியர் ஸ்ரீ சின்னத்தம்பியவர்களோடும் எமதனுதாபமிருக்கின்றது.

வித்தியாகர்த்தர்—இலங்கை வித்தியாகர்த்தராயிருந்து சீமை சென்ற இளைப்பாறிய மெஸ் கல் (Mr. Cull) அவர்களின் இடத்திற்கு இலங்கைச் சிவில்சேவிஸ் உத்தியோகஸ்தருள் ஒருவராகிய மெஸ். பரோஸ் (Mr. Barrows) அவர்கள் நியமனமாயினர். இவர் அதிக கல்வித்திறமையுடையவர். இவரது தந்தையார் கேம்பிறிஜ் சர்வகலாசாலையில் ஓர் ஆசிரியராக விருக்கின்றனர்.

கொலை—கொழும்பு ஜிந்துப்பிட்டித் தெருவிலிருக்கும் சோனியா வென்பவன் தனது பெண்சாதியோடு சச்சரவுபட்டு அவளைக் கத்தியாற்குத்திக் கொன்றுவிட்டனன். இவனது பெண்சாதியின் சகோதரனை இவன் தனது வீட்டிற்குவரவேண்டாமென்று தடைபண்ணியதால் மனைவிக்கு மிவனுக்குமிடையே யெழுந்த பேச்சுவார்த்தையாலுண்டாய கோபமே இக்கொலைக்குக் காரணம். பெண்சாதியைக் கொன்றுவிட்டபின், இவன் பொலீஸ் ஸ்டேஷனுக்குத் தானேசென்று சடுதியிலெழுந்த கோபத்தால் தன்பெண்சாதியைத் தான்கொன்றுவிட்டனனென அறிவித்துத் தன்னையொப்புக்கொடுத்தனன். இவனோர் குணசாலியாம். ஆயின் பெண்சாதியோ மூர்க்கத்தனமுள்ள ஓர்பெருங் கீலியாம்.

கிளேறிக்கற் பரீக்ஷை—இப்பரீக்ஷையில் ௨௫பேர் சித்திபெற்றிருக்கின்றனர். இவர்களுள் எழுவர் தமிழர்.

கொள்ளைநோய்—வம்பாயிலிருந்து காலிக்குவந்திருந்த ஒருவனுக்குச் சுரங்கண்டு கொள்ளைநோய்க்குரிய அடையாளங்கள் காணப்பட்டபடியால் அவன் அங்குள்ள புவனவிஸ்தா வென்னுமிடத்திற் கட்டப்பட்டிருக்கும் கொள்ளைநோயாஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் வைக்கப்பட்டிருக்கிறான். இவனுக்கு வைத்தியஞ்செய்த சுதேச வைத்தியனுக்கு மிக்கதியேயாயிற்று. "அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பேய்" என்றபடி கொள்ளைநோய் அச்சம் மேலிட்டபெற்ற அரசாட்சியார் கண்ணுக்கு இதுகொள்ளைநோயாய்த் தோன்றியதன்றி உண்மையளவிற் கொள்ளைநோயல்லவென பின்வந்தசெய்தியாலறியலானோம்.

பாம்பன் புகைரதவீதி—மதுரையிலிருந்து பாம்பனுக்கு றெயிற்பாதை திறப்பதற்கு ஆயத்தங்கள் நடக்கின்றன. இப்பாதையை அளப்பதற்கு வேண்டிய செலவு இவ்வளவென மதிப்பிடப்பட்டு அம்மதிப்பின்படி பணமெடுத்துச் செலவழிக்க உத்தரவு மளிக்கப்பட்டிருக்கிறது. இப்பாதை திறக்கப்படுமாயின் யாழ்ப்பாணம் றெயில்வே அத்தியாவசியகமாகுமன்றோ.

ஸ்ரீமத் விவேகானந்தசுவாமியவர்கள்—ஸ்ரீமத் விவேகானந்தசுவாமியவர்கள் இப்பொழுது கலகத்தாவுக்கு வந்திருக்கின்றனர். இமயமலைச்சாரலில் இவருக்குண்டாயிருந்த அசௌக்கிய மிப்பொழுது சற்றே சாந்தியாய்விட்டது. சிறிதுநாட்களிற்பின் அமெரிக்காவுக்குச் செல்வாராம்.

பூனேக்கொலை—பூனாவிலே இரு ஐரோப்பிய துரைமாரைக் கொலைசெய்த தாமோதரர்சபேக்காரையும் அவனது சகோதரனையுங் காட்டிக்கொடுத்து அரசாட்சியாரிடம் உபகாரம்பெற்ற டிறாவிற்ஸ என்னுமிரு சகோதரர்களைக் கொலைசெய்தவர்கள் இப்பொழுது பிடிபட்டிருக்கின்றனராம்.

ஒற்றையாளிவண்டிகளும் நாய்களும்—ஒற்றைச்சில்லு வண்டிலிலேறித் திரிபவர்களை நாய்கள் தொந்தரவு பண்ணுகின்றன. ரங்கூனில் ஒரு உத்தியோகஸ்தர் ஒற்றைச்சில்லு வண்டியொன்றிலேறிச் சென்றபோது வேறொரு உத்தியோகஸ்தருடைய நாயவரைக் கடித்துவிட்டது. கடிபட்டவர் நாயின் சொந்தக்காரனுக்கு விரோதமாக [illegible] ரூபாய்க்கு ஓர்வழக்குக் கொண்டுவந்திருக்கின்றனர். வழக்கு எவ்வாறுமுடியுமோ தெரியவில்லை.

உத்தியோகமாற்றம்—தமது உத்தியோகத்திலிருந்து இளைப்பாறும் நோக்கமாகச் சீமைக்குச்செல்லும் சேர். சோண்டேஸ் அவர்களினிடத்திற்கு இலங்கையரசுப் பொக்கிஷாதிகாரியாக மெஸ் வீத் துரையவர்கள் நியமனமடைய, அவரது இடத்திற்கு ரேகுத்தலைவராக மெஸ் மொயிசித்துரையவர்கள் நியமனம் பெற்றனர்.

முதலைவாய்ப்பட்டவனொருவன் மீண்டது—கிரியன் ஆற்றோரத்தில் சில யாவர் மரக்கள் தரித்துக்கொண்டு நின்றபோது கரையிலிருந்த வள்ளமொன்றிலிருந்த ஒருவன்மீது மரமொன்று வீழ்ந்து அவனைத் தண்ணீரிலமிழ்த்திவிட்டது. அப்போது கொஞ்சதூரத்தில் நின்றுகொண்டிருந்த முதலையொன்று நீந்திவந்து அவனைக் கடவாயிலே கவ்விக்கடித்திழுத்தது. இருக்கவே அவன் வள்ளத்தை இறுகப்பிடித்துக்கொண்டு கூச்சலையிட்டனன். கரையில் நின்றவர்கள் [illegible] வள்ளங்கட்டப்பட்டிருந்த கயிற்றைப்பிழுத்து வள்ளத்தையும் மனிதனையும் கரைசேர்க்க முதலை பின்வாங்கிவிட்டது. முதலையின் கடியால் அவனது காலிற் பெருங்காயமுண்டாயதாம்.

இராஜகுமாரி—நமது மகாராஜனியவர்களின் பிரதமகுமாரராகிய உவேல்ஸ் இளவரசரவர்களின் மனைவியார் ஓர்கிளி வளர்க்கின்றார்கள். அதன் பெயர் டக். அதை [illegible]-ம் வருஷத்தில் பிற என்னும் மகாப்பிரபு வாங்கி [illegible] அரசகுமாரிக்கு இனாமளித்தார். அதற்கு இப்போது வயது ஏறக்குறைய ௨௦௦. இது இன்னும் கிளியினுடைய இலட்சணங்களில் சிறிதுங்குறைவின்றியிருக்கின்றதாம். இதேமாதிரி கிளி ஒன்று பிரான்ஸ்தேசத்திலிருந்தது. அது அகவன்மெண்டை அறிந்ததாகச் சொல்லப்படுகிறது.

—கற்கத்தாச் சர்வகலாசாலையில் இம்முறை நடந்த பீ. ஏ பரீக்ஷையில் நாலு ஸ்திரீகள் சித்தியடைந்திருக்கின்றனர். இவர்களில் இருவர் சுதேச ஸ்திரீகள், இருவர் ஐரோப்பிய ஸ்திரீகள். மேலும், மறுவருடம் நடத்தப்படும் பிரவேசப்பரீக்ஷைக்கு இரண்டு எம். ஏ பட்டதாரிகளான சுதேச ஸ்திரீகள் சோதனைகாரராக நியமிக்கப்பட்டிருக்கின்றனராம்.

—சென்றமாதம் ௨௨௨ காலை கிரீஸ்தேசத்திலும் [illegible] பூமியதிர்ச்சி யுண்டாய்க்கொண்டிட இருந்து மிகவும் பலமாய்த் தென்மேற்கிலுண்டானதால் அங்கு அநேக பட்டணங்களும் கிராமங்களும் சேதமாயின, அதின் குடிகள் பயப்பட்டுக்கொண்டிருக்கின்றனர், அந்தத் தேசத்தில் பூமியதிர்ச்சி மிகவும் உண்டாவது வழக்கம். கி மு [illegible] உண்டான அதிர்ச்சியால் [illegible] என்னும் நகர் தண்ணீரினின்றுமே லெழும்பியது. பிறகு [illegible] வருஷத்திலுண்டான அதிர்ச்சிகளால் பட்டணங்கள் இருந்தவிடத்திலேயே முழுகிப்போயின. ஐந்து வருஷங்களுக்குமுன் உண்டான ஓர் அதிர்ச்சியால் தீப்ஸ் என்ற பட்டணம் ஏறக்குறைய முழுதும் நாசமாய்விட்டது ஆ-ன்.

கடிதஉத்தரம்—தமிழ்ச்சங்கக் கூட்டவரலாற்றுக் கடிதம் பிந்திவந்தமையால் [illegible]வில்லை மறுமுறை வரும்.

## கடிதம்

## ஆன்ம இலட்சண ஆபாச விமோசனம்.

"பிறன்பழிகூறுவான் தன்பழியுள்ளுந்
திறன்தெரிந்து கூறப்படும்"

பாநுசாவலனில் வெளிப்பட்ட வான்ம விலட்சணவாபாச விஷய தாரியரகிய மதிநுட்ப மாப்பிரபுவே! ஆன்மாவானது கடவுளாற் சிருட்டிக்கப்பட்ட பொருளேயென்பது தமது சித்தாந்தமாயின், 'சிருட்டித்தல்' என்பதின் பொருளென்னோ? தானல்லாததூஉம், தன்னாற் சிருட்டிக்கப்பட்டாததூஉமான வேறோர் பொருளிலிருந்து இன்னுமோர் வேறுபொருளையுண்டு பண்ணுதலே சிருட்டித்தலாம். உதாரணமாக:-குயவனொருவன், தானல்லாததூஉம், தன்னாற் சிருட்டிக்கப்பட்டாததூஉமான மண்ணிலிருந்தே வேறாய குடத்தையுண்டு பண்ணுகிறான். இங்ஙனமே, தமது கடவுளானவர்-தானல்லாததூஉம், தன்னாற் சிருட்டிக்கப்பட்டாததூஉமான ஏதோவேறோர் பொருளிலிருந்தே ஆன்மாவைச் சிருட்டித்திருக்க வேண்டும். அங்ஙனமாயின், அவரல்லாததூஉம், அவரால் சிருட்டிக்கப்பட்டாததூஉமான ஏதோ வேறோர் பொருள், தானே தோற்றமுடையதாயிருத்தல்வேண்டும், அங்ஙனம் தானே தோற்றிய வோர்பொருளை ஆளுதற்குக் கடவுட்கு வல்லமையில்லையாதலின், அவர் சர்வ வல்லமையுடையரல்லர்' எனக்கூறுந் தங்கூற்றின் பிரகாரம், தங்கடவுட்குக் கடவுளிலட்சணமின்றாம். 'அநாதிநித்தியம் ஆன்மாவுக்குரிய விலட்சணமல்ல' எனப்பேசப்புகுந்து, தங்கடவுட்குக் கடவுளிலட்சணமின்றெனக்காட்டி, தம்மதத்துக்கே நாஸ்திகந்தேடிக்கொண்ட நும்புத்தியே புத்தி! "பிறர்க்குவெட்டிய குழி தமக்கேலயித்தது போலும்" ஐயையோ பாவம்! பாவம்!! இனி, 'கடவுள் சர்வவல்லமையுடையராதலின் வெறுமையிலிருந்தான்மாவை யுண்டுபண்ணக்கூடும்'' என்னும் நும்போலியோர் கூற்றைச் சற்றாராய்வாம். 'ஒருபொருள் அதற்குமாறான வேறோர் பொருளாய் மாறாது' எனத் தாம்காட்டிய தத்துவசாஸ்திரப்பிரமாணப்பிரகாரம், வெறுமையிலிருந்து அதற்குமாறான வேறோர்பொருளை யுண்டுபண்ணுதல் சாத்தியமான விஷயமன்று.

இனி, வெறுமையென்பதின்பொருள் சூன்யம். வெறுமையான விடமாவது யாதாமோர் பொருளினின்மையான விடமாம். அங்ஙனமாயின், அச்சூன்யமான விடத்திற் கடவுளுநிலரென்பதாய்ச் சித்தாந்தமாகும். ஆகவே, தங்கடவுட்கு, அபரிபூரணமென்னுந் தோஷம் பற்றும்; அங்ஙனம் பற்றவே, அவர்க்குக் கடவுளிலக்கணமின்றென்பதாய் இதனாலும் பெறப்படும். இவ்விதவிலக்கண மமையப்பெற்ற கடவுளைப்பற்றிப் போதிக்கும் நூலையும், அந்நூல்வழிநிற்போர் மதத்தையும் நம்பி நடப்பவர்களின் கதி எவ்வாறுமெனில், 'மண்குதிரையைநம்பி யாற்றிலிறங்கினோன்' கதியெவ்வாறுமோ அவ்வாறுமென்பதற்கையமில்லை. இனி, வெறுமையென வோரிடமிருப்பின் கடவுள் சர்வவியாபகரல்லர்; கடவுள் சர்வவியாபகரெனில் வெறுமையெனவோரிடமுமில்லை. 'கடவுளுஞ் சர்வவியாபகர்; அத்துடன் வெறுமையெனவோரிடமுமுண்டு' எனக் கூறுவது சேர்விரோதமான விரண்டுநும மொன்றினைக்கிணைத்தெனக் கூறுக் நியாயநூற்கு விரோதமுமாமெனவறிக. இவ்வாவனைத்த தோஷங்கட் கிடனாயிருக்க, வெறுமையிலிருந் தான்மாவைக் கடவுளுண்டு பண்ணினாரெனக் கூறுவது, நியாயவழிநின்று பேசுவோர் கூற்றேயன்றி, நியாயவழிநிற்போர் கூற்றன்று. இனி, எது அநாதியோ அது நித்தியம்; எது ஆதியோ அது அநித்தியம்: இஃதிங்ஙனமாக, "ஆதிநித்தியம்" எனவோர் கவிலக்கணமமைத்த நும்புத்திசாலவும் வியக்கப்பாலது. அநாதிநித்தியங் கடவுட்குரிய விலக்கணமேயன்றி, ஆன்மாவுக்குரிய விலக்கணமன்றென்பது தமது சித்தாந்தமாயின், தம்மதக்கொள்கைப்படி அநித்தியவான்மா பின் நித்தியமென்னுங் கடவுளிலக்கணத்தைப் பொருந்துமிடத்து, அநாதிநித்தியமென்னுமிலக்கணத்தை ஆன்மா பொருந்திலதென்னோ? தமக்கோர் நியாயமும் பிறர்க்கோர் நியாயமுமா? இனி, கடவுள் ஆன்மாவை என் சிருட்டித்தார்? ஓர்காலத்துச் சிருட்டியாது, பின்னோர்காலத்துச் சிருட்டித்தமையால், ஏதோ நியாயம்பற்றிச் சிருட்டித்திருக்கவேண்டும். அங்ஙனம் நியாயம்பற்றிச் சிருட்டித்தாரெனில், அவர் விருப்பமுடையராகின்றார். இங்ஙனம் விருப்பமுடையராய் விகாரகுணம் பொருந்துமிடத்து அவர் கடவுளல்லர். விகாரகுணங் கடவுட்குரிய விலக்கணமாயின், அநாதிநித்தியமும் ஆன்மாவுக்குரிய விலக்கணமென்பதிற் தோஷமில்லை. இதுநிற்க.

நீவிர், நம் சமயசாஸ்திரவிஷயங்களில் யானைகண்ட குருடர்போன்றிருக்கின்றீராகையால், அவைகளிற் குறைகூறல் தமக்கழகன்று. இலக்கணரீதியாய் எழுதப்படும் பாஷைகள் சமுத்திரலகு நியாயம் பற்றித் தமக்கு அருவருப்பைத் தருதலினாலும், தர்க்கரீதியா யெழுதப்படுவனவெல்லாம், தம்மாலவற்றை மறுக்கமுடியாப்பட்சத்திற் தமக்குக் குதர்க்கம்போற் தோன்றுதலினாலும், நம் சமயசாஸ்திரங்களெல்லாம் இலக்கணரீதியாயுந் தர்க்கரீதியாயு மிருக்கின்றனவாதலாலும், நும்போலியோருடன் சமயவாதஞ்செய்தல் நம்மனோர்க்கு மழகன்று. "என்பதூஉம்" "காண்பதூஉம்" "என்றே" "என்க" என்னும் பதங்களமைத்து எழுதும் பாஷைக்காரருக்குத் தாம் செவிசாயாவிட்டால், புங்கே, பிஞ்சே, எங்கடை, இவண்டை, ஏனுமெடோ என்பனபோன்ற பதங்களமைத்து எழுதும் பாஷைக்காரருக்கு நாமுஞ் செவிசாயோமெனவறிக.

இங்ஙனம்;
இந்துமதாபிமான சங்கத்தங்கத்தவனாகிய
நியாயதண்டாயுததாரி.

## சிவராத்திரி விரதம்.

இவ்விரதம் இக்கமீ ௨௮௨ சுக்கிரவாரத் திரவு வருகின்றது. இது சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதம். சிவபெருமான் திருநந்திதேவருக்கு அருளிச்செய்த மகிமையையுடையது. இவ்விரதத்தை முறையே அனுட்டிப்பவர்கள் பெறும் பேற்றை யெம்போலியாராற் கூறமுடியாது. இக்கலியுகத்திலே முறையாவனுட்டிக்க, தீர்த்தஸ்நானஞ்செய்ய, தரிசிக்க, 'மூர்த்திதலந் தீர்த்தமுறை'மென்றபடி சிவனடியவர்கள் செய்த புண்ணியபலத்தா லெழுந்தருளிய சோயம்புலிங்கமூர்த்தியாகிய நகுலேசபெருமானும் நகுலேஸ்பரியும் வீற்றிருக்கின்ற கீரிமலையிலே இவ்விரதத்தை அனுட்டிப்பது மிகவு முத்தமோத்தமம். இவ்வாலயத்திலே சிவனடியவர்களால் இத்தினத்தில் சிவராத்திரிபுராணபடனம் ஓதப்படும். "அன்புளாரன்றியன்பிலரெனினுமாசிவிஇனை வகற்றிப், புன்புலாலுடலம் வருந்திடத் துயில்கண்பொருந்திடாதருச்சனைபுரிவோர் தனபதின்பிறவிச்சுழிக்கடலமுந்தித்துயருறாதறக்கமேமுதலா, மின்பமார்பதத்திற்போகமார்ந்தமலனிணைப்பதம்பெறுவரென்றிசைத்தான்" என்னும் புராணவாக்காலுமுணர்க.

புண்ணியவான்களே! இத்தினத்தில் இவ்விரதத்தை முறையே அனுட்டித்து நகுலேசபெருமானையும் தேவியாரையும் வழிபட்டு இயன்ற தானதருமஞ்செய்து வாழக்கடவீர்கள்.

இங்ஙனம்
நகுலேசதாசன்
கீரிமலை வாசன்.

## சந்தேகவினா.

சென்ற ௨௨ம் இலக்க உதயதாரகையில், "இங்கிலாந்தும் பிரான்சும்" எனமகுடஞ்சூட்டி எழுதிய விஷயத்தில், உதயதாரகைப் பத்திராதிபர், "நீர்கீழ்ச்சென்று தோப்பிடோ என்னும் யுத்தமரக்கலங்களையுடைக்கும் புதிய சங்காரவள்ளங்களுக்கு" எனவரைந்திருக்கிறார். இதில் தோப்பிடோ எனப்பத்திராதிபர் கருதியது யுத்தமரக்கலங்களையா அல்லது சங்காரவள்ளங்களையா என்பதைத் தாரகைப்பத்திராதிபர் தம்பத்திரிகைவாயிலாக அறிவிக்குமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்
வே. மு.

Christians of Batticaloa, one and all, be "a people of the living God"? It is such hollow professions that throw discredit on Christianity. Here, in Jaffna, people who preach "glory to God, peace and good will unto all men", are found to be the most inveterate haters.

A "student" has evaded or missed the point. Our article did not call for a lecture on the etymology of the words. We took exception to the words "heathen" and "pagan" on the ground of their being offensive terms. He does not deny that they are calculated to give offence to the Hindus. Will not the Catholics be offended if we call them and His Holiness the Pope by such names as have been given to them by some narrow-minded Protestants? Certainly the "Guardian" will not consider it a good defence if we say that Webster and other lexicographers give to the offensive words the meaning in which we employ them. If the "Guardian" reverts to the subject, we should like to have a pronouncement from the Editor himself. People who do not write above their names may say anything and everything. Their words carry little or no weight. Why should the defender of a cause, if good, take shelter in anonymity?

## SRI RAMAKRISHNA PARAMANAMSA,

The life of this true *Yogin*, the spiritual guide of Swami Vivekananda and his brother *Sanniyasins*, is just out from the pen of Prof. Max Muller. Without possessing much of book knowledge, which, more often than not, tends to the narrowing of the intellectual vision, the great master whose name "has so often been", the Professor says, "in Indian, American, and English newspapers", exercised by his personal teaching and through his disciples, a powerful influence in creating clearer, deeper, and more liberal ideas about religion and philosophy, than, with few exceptions, any other spiritual teacher, ancient or modern, has done. The Master, a poor priest of a temple, probably never wrote a single line in his life, but his words frequently outpouring from the abundance of a most simple and guileless heart, as water from a clear spring, were listened to and treasured by numbers of highly educated men and women in India. These have been preserved, and from time to time published in the "Brahmavadin." The sayings of the *yogin* exhibit a love and toleration towards all creeds, and a wonderful insight into humanity, which is most re-assuring and comforting. An account of the Guru's life has not yet been published in India, but a short sketch by Mr. Moozoomdar is sold at one anna, and a collection of the "Sayings of Sri Ramakrishna Parahamsa" at eight annas, both by the late Manager of the *Awakened India*, Mylapore, Madras, which is now published at Almora. Each saying is well worthy of being most carefully pondered upon. His watch words were:—"Let there be peace, peace be to you and to all religions." His is not a message breathing antagonism to other faiths but of one united religion. A dissemination of this message, will end the religious bigotry and antipathy that mar the peace of the world

## LOCAL AND GENERAL.

A Sanitary Officer for Jaffna—We understand that the Government Agent is about to recommend to the Government the desirability of appointing a sanitary officer for Jaffna who will look after the sanitation of the Town and superintend the scavenging operations performed under the direction of that out-of-date institution known as the Board of Health.

A new Telegraph Office—It is said that a telegraph office will be opened at Manippay this month.

At Home—Mrs. Ievers held an *At Home* on the 18th Instant, which was attended by almost all men of light and leading in the District. Many Tamil ladies also graced the occasion by their presence.

The Government Agent—Mr Ievers in his capacity of Chairman of the District Road Committee, is busy in disposing of the claims of candidates for exemption from the payment of poll-tax.

An Appointment—We learn that Mr. J. B. Tambiah of Jaffna is employed as Assistant Post-Master at Haputale.

Mr. T. Twynman—The Assistant Collector of Customs, Galle, who came to Jaffna in connection with the death of his brother, the late Mr. W. M. S. Twynam, has returned to Galle.

A Fiscal's Surveyor—We are glad to inform our readers that Mr. J. N. Sandrasegara, the well-known Licensed Surveyor, has been appointed Fiscal's surveyor by the Fiscal of the Northern Province.

Mr Tranchell—The Assistant Superintendent of Police and Deputy Fiscal, who was at Pallai on a month's leave, has resumed his duties

A Successor to the late Mr Navaratnasingam—We understand that Mr. Nicholas, a relation of our well-known Townsman Mr. Manuelpillai Rajakariar, has been appointed Superintendent of the Board of Health coolies

The Department of Public Instruction—Mr. Cull retires from the Directorship at the expiration of his leave and will be succeeded by Mr. S M Burrows of the Ceylon Civil Service Mr. Ashley Walker, the Senior Inspector of Schools, is also to retire shortly. This is likely to give an onward move to the other Inspectors and Sub-Inspectors.

The Clerical Examination—The result of the Clerical Examination is out. Seven Tamils have passed whose names are as follows:—K Chinnatamby, B Emmanuel, J. J. Jacob, K. Kanagasegaram, M. Joseph, R. Raju, and S. Velupillai.

Kayts—The Minor Courts of Kayts will be held in the Island of Delft during the month of March.

Obituary—We regret to record the death of Mr. D. Christian, a son of the late Mr. Deogupillai well-known as a Translator attached to the Jaffna Courts. Mr. Christian was employed as a clerk in the "Jaffna Catholic Guardian" Office.

Two more Deaths—We regret to announce the death, from fever of Mr Bates, Dresser at the F. N. S. Hospital, which took place on the 25th Ultimo. We also regret to announce the death of a child of Dr. Paul, of brain fever, which lasted not more than three days

American Methods—General Woodford who was United States Minister at Madrid, when war was declared between Spain and the United States, made an important statement in the course of a speech delivered by him in New York, on 29th January last. He said that when the Maine explosion occurred, the United States Government possessed only two rounds of powder per gun He added that he was instructed to endeavour to ensure the postponement of a rupture for two months In this he had succeeded, but certainly would have failed had it not been for the unfaltering friendship of England. In other words America pretended to be willing to settle her differences with Spain without going to war while she was actually preparing for war and only wanted time to make herself ready.

Missionary Methods—The raising of the Chetty Street English School to the status of a High School with a University Graduate as Principal was su[illegible]ent' to the establishment of the Hindu College. Such intolerance on the part of Missionaries is by no means confined to Jaffna or to the Wesleyan Missionary Society. We read as follows in a contemporary:—"The Missionaries of Erode have raised the local London Mission Primary School to a High School to compete with the Hindu High School, which is said to be doing very good work under a patriotic Hindu Graduate The Missionary gentleman is reported to have issued a notice stating that a specially low rate of fee will be charged."

The Central Hindu College at Benares—About half an hour is now daily allotted in this College to the instruction in the principles of the Hindu religion. A portion of the *Gita* is first read in Sanskrit by one of the Pundits, then follows reading of selections from the sacred books, the compilation *Saswata Dharma Dipika* being found specially useful The texts are first translated into the vernaculars of the students, and then moral precepts are emphasized with the help of Puranic stories. The lesson is then concluded by a few words from the Principal in which an endeavour is made to lead the students to practise some moral precept during the day's work. What is aimed it is to make the lesson interesting as well as instructive, and to present the practical side of the Hindu religion in a way that will tempt the students to apply it in daily life. Hence although the religious instruction imparted is of half an hour's duration, it lasts the whole day. In addition to the regular course of religious instruction, special lectures are given to the students who voluntarily attend—*The Hindu.*

The Meeting at the Saivite School—We hold over for our next issue the interesting proceedings of a public meeting presided over by Mr. C. W. Kathirvelupillai, and convened at the instance of the College of Pundits, Jaffna, on the occasion of the awarding of gold and silver medals to the three students who passed the examination recently held by the College for testing the qualifications of candidates for the degree of "Bala-Pundit."

The Meeting at the Police Court House—A public meeting of the residents of Jaffna was held on the 28th Instant under the presidency of Mr. Ievers, the Government Agent, to consider the desirability of erecting a Town Hall at Jaffna. There was a fair attendance. The first resolution which was moved by Mr. S. A. Allegakoen was to the effect that the establishment of a Public Hall was necessary for holding meetings, social gatherings, &c. The Very Rev. Father Collin moved as an amendment that the question of supplying the Town with fresh water, which was a necessity, must be considered and dealt with before that of building a town-hall, which he regarded as a luxury. The amendment which was seconded by Mr. Bastiampillai, the energetic Kachcheri Mudaliyar, was put to the meeting and lost, and the original resolution carried by a majority. Several gentlemen abstained from voting either way. Much credit is due to Mr. M. Chinnappa who was instrumental in calling the meeting.

The late Mrs. Sundaram—We extremely regret to record the untimely death at Colombo of Mrs. Sundaram, the wife of the Senior Landing Waiter of Customs, Colombo. She was ailing from Pneumonia which lasted for about a week. All that medical skill and nursing could do was done to rescue her from the fell disease, but to no purpose. She was a member of a well-known and respectable family at Vannarponnai, and was married to Mr. Sundaram only a few years ago. We express our condolences with Mr. Sundaram in his sad bereavement. Our readers are no doubt aware that Mr. Sundaram is a generous and public-spirited citizen always ready to promote all charitable undertakings and institutions.

## THE CRIMINAL SESSIONS OF THE SUPREME COURT.

The first Criminal Sessions of the Supreme Court for Jaffna for the year 1899 commenced here on the 27th Ultimo, Mr. Justice Withers presiding, Mr. Swan being Registrar, Mr. E. H. Prins Prosecuting Counsel, Mr. Wijeyesekara Private Secretary, Mr. M. S. Ramalingam, Tamil Interpreter, and Mr. De Silva, Singhalese Interpreter. There were 8 cases on the Calendar, of which case No. I was first taken up. In this case one Nagapper Arunan, a noted thief of Vannarponnai. was charged with theft of a bag of rice from a Chetty's godown. Mr. Advocate Kanagasabai defended the accused. An English speaking Jury of which Mr. J. N. Sandrasegara was foreman was empannelled, Verdict—not guilty by a majority.

Case No. 8 also was disposed of on the same day. In it the same accused Nagapper Arunan was charged (1) with theft alleged to have been committed on the 26th of January last (2) with dishonestly retaining stolen property knowing it to have been stolen. Mr. Kanagasabai defended the accused. The evidence for the prosecution in this case was not very reliable, and the Jury of which Mr. Sandrasegara was foreman again found him not guilty on the first count by a majority of 7 to 2, and on the second count by 5 to 4.

On the 28th Instant, case No. 2 was taken up, in which Ratnasingam Thalaiasingam, a son of a late Manager of the Maruthady Pillayar Temple at Manipay was charged with mischief by setting fire to a dwelling house on the 19th July 1898. An English speaking Jury with Mr. Rodrigo as foreman was empannelled to try this case. Mr. Advocate Sandrasegara defended the accused who was convicted and sentenced to seven years' rigorous imprisonment. His accomplice was tried in the last Sessions and sentenced to seven years' imprisonment.

## A BEAUTY BALLOT.

The people of the East strongly resent their mothers, wifes, sisters, or daughters being made the subject of public talk for their beauty or dress. But this is not the case in the West, where people seem to take a pleasure in advertizing the beauty and dress of women. Recently, the Anglo-Indian papers of India described the wife of a very high official there as a very beautiful person, and even proceeded to the length of giving details relating to her beauty and dress. The native society was shocked at such conduct on the part of Europeans. But it is no wonder that people who kiss in public, court in public, and make love in public, do such things. The London correspondent of the "Hindu", a most well-informed person on subjects relating to the West and the East, writes as follows:—The superabundant energies of both men and women in England, whenever they fail to find natural outlet, in the ordinary avocations of life, seek to get out through other channels. The aristocracy and others who enjoy the leisure of realised wealth are always in search of new excitements and occupations. The social parties of the nature of fancy dress balls and masked dances, afford some opportunities. But these are becoming rather too stale, and so newer excitements and occupations are wanted! The Earl of Rosslyn started an excitement recently—in the form of a beauty ballot. Votes were taken upon the question who is the most beautiful woman (1) in England: (2) Scotland, and (3) in Ireland. The results of this beauty competition show that in Ireland—the daughter of the Marchioness of Londonderry—Lady Helen—stands at the head of the ballot with 4.365 votes. Her Royal Highness the Princess of Wales coming out in competition with her, with only 1,211 votes. In the English division, Mrs. James Beck of whom little seems to be known, heads the poll with 3,126 votes, the Princess of Wales, though coming after her is higher than Mrs. Langtry. Civilization is a queer thing. Not to speak of Royalty, there is no lady even among the respectable lower classes in India, who would not feel sorely insulted, if her name was being discussed by a circle of men and women in this public way. in connection with a beauty competition. But Indians, as Lord George Hamilton is reported to have said, are a savage people!

☞ PRINTED AND PUBLISHED BY P. CARTHIGASAPILLAI FOR THE PROPRIETORS AT THE SAIVAPRAKASA YANTRA OFFICE, JAFFNA.